**பட்டுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு. இரா. கோவிந்தராசு** எம்.ஏ.,எம்.ஏ.,பி.எட்.,

ந.க. 2186/2016/அ1 நாள்:11 .11.2016.

பொருள்: பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி பணியாளர் தொகுதி - தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலகு - கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறை செய்ய அரசாணை வெளியிடப்பட்டது - பட்டுக்கோட்டை கோட்டம்- பட்டுக்கோட்டை வட்டத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திரு.ஜெயரெத்தினம் த/பெ. ஜெயராமன் (லேட்) என்பவர் பணியினை பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது

பார்வை:

1. தஞ்சாவூர், மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:ந.க.43466/2013/அ1 நாள்: 30.05.2014
2. பட்டுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:ந.க.1875/2014/அ1 நாள்: 30.05.2014.
3. அரசாணை (நிலை) எண்:80 தொழிலளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ-1)த்துறை, நாள்: 02.03.2016.
4. தஞ்சாவூர், மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:ந.க.57140/2011/எஸ்1 நாள்: 28.06.2016.
5. பட்டுக்கோட்டை வட்டாட்சியர் கடித எண்: ந.க.13/2016/அ4 நாள்: 30.08.2016
6. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

----------

**ஆணை:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை விரைவில் பணிவரன்முறை செய்திடும் பொருட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ( Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்திட சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களுக்கு ஆணையிடப்பட்டு பார்வை 3-ல் காணும் அரசாணை வரப்பெற்றுள்ளது.

Scanned with OKEN Scanner

அதன்பேரில் பார்வை 4-ல் காணும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி பட்டுக்கோட்டை கோட்டத்தில் கருணை அடிப்படையில் 01.02.2016 முன் கிராம நிர்வாக அலுவலராக நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்திட எந்தவித விதித்தளர்வு ( Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ( Exemption of Government Orders) தேவைப்படாத 10 கிராம நிர்வாக அலுவலர்களின் பணியினை வருவாய் கோட்ட அலுவலர் வரன்முறை செய்திட ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்பேரில் பார்வை 1-ல் காணும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறையின்படி பட்டுக்கோட்டை கோட்டத்திற்கு கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலராக ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி பட்டுக்கோட்டை வட்டத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.ஜெயரெத்தினம் த/பெ. ஜெயராமன் (லேட்) என்பவரின் பணியினை அவர் பணியேற்ற நாளான 02.06.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

15/11/16

வருவாய் கோட்ட அலுவலர்,
பட்டுக்கோட்டை.

பெறுநர்:

திரு.ஜெயரெத்தினம்
கிராம நிர்வாக அலுவலர்,
பட்டுக்கோட்டை.

நகல்: மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது
நகல்: வட்டாட்சியர், பட்டுக்கோட்டை. (தனியரின் பணிப் பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள)

Scanned with OKEN Scanner